# 8

# சிலுவையில் அறையப்படுதல்

## மத்தேயு 27:31-54; மாற்கு 15:20-39; லூக்கா 23:26-47; யோவான் 19:17-30

*"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (ஏசாயா 53:5).*

ஆங்கில மொழியில் "the cross" என்பதைக் காட்டிலும் அதிக அர்த்தம் நிறைந்த இரு வார்த்தைகள் வேறு எதுவும் இல்லை! சிலுவை பற்றிய படிப்பை நாம் பயந்து நடுங்கும் இருதயத்துடன் அணுக வேண்டும். அதனால் இரட்சிக்கப்பட்டுள்ள யாவருக்கும் அது வாழ்நாள் முழுவதற்கு மான படிப்பாக இருக்க வேண்டும்.

*சிலுவையில் அறையப்படுதல்!* எவ்வளவு மிருகத்தனமானதாக, காட்டுமிராண்டித்தனமானதாக, கொடுமையானதாக மற்றும் மனிதத் தன்மையற்றதாக உள்ளது! அனேகமாக, இது பெர்சியர்களால் கண்டு பிடிக்கப்பட்ட பின்பு ரோமர்களால் முழுமைப்படுத்தப்பட்டதாக இருந்தது.

சற்றுக்காலத்திற்குப் பின்பு, ரோமாபுரி அதன் சிலுவையில் அறைதல் களினிமித்தம் புகழ் அற்றதாக ஆனது. மரணதண்டனைக்கான இந்த முறைமையானது சிறுமைப்படுத்துதலின் நிறைவான வடிவமாக இருந்தது. ரோமாபுரியானது ரோமர்களைச் சிலுவையில் அறைந்ததில்லை. யூதர்கள் சிலுவையில் அறைவதை இகழ்ந்தனர் (உபாகமம் 21:23; கலாத்தியர் 3:13); அது ஒருக்காலும் அவர்களின் வழக்கமாக இருக்கவில்லை. இன்றைய நாட்களில் மிருகங்கள்கூட அன்று இயேசுவைக் கொடுமைப்படுத்தியதைப் போன்று நடத்தப்படுவதில்லை.

உலகின் பெரும்பான்மையான பகுதிகளில் மரணதண்டனை என்பது நடைமுறையில் இருப்பினும், நவீன நாகரீகமானது சிலுவையில் அறையப் படுவதைப் புறக்கணிக்கிறது. இன்றைய நாட்களில் மரண தண்டனை நடை முறையில் இருக்கும் இடங்களில் அது விரைவாக, வேதனையற்ற வகையில், மற்றும் இயன்ற அளவுக்கு மனிதத்தன்மையுடன் நடைமுறைப்படுத்தப் படுகிறது.

*சவுக்கால் அடித்தல்!* ரோமர்களின் மரண தண்டனை நிறைவேற்றத்தில்,

சவுக்கால் அடித்தல் என்பது சட்டரீதியான தொடக்கமாக இருந்தது. இயேசு தமது பாடுகளின் தொடர்பாக, சவுக்கால் அடிக்கப்படுதலைத் தீர்க்கதரிசனமாக உரைத்திருந்தார் (மத்தேயு 20:17-19; மாற்கு 10:32-34; லூக்கா 18:31-34), மற்றும் அவர் அவ்வாறே அடிக்கப்பட்டார்!

சவுக்கால் அடித்தல் என்பது மிருகத்தனமானதாக இருந்தது. அது மாபெரும் இரத்த வீக்கங்களையும், ஆழமான காயங்களையும், வீங்கிய உடலையும் உண்டாக்கிற்று. பெரும்பாலும், கண்களும் பற்களும் வெளித் தள்ளப்படும். சில மனிதர்கள் அதினால் இறந்து போவதுண்டு. இருப்பினும், சவுக்கால் அடித்தல் என்பது, மரணதண்டனைக்கானதாக இருந்ததில்லை. சவுக்கால் அடித்தல் என்பது தண்டனைக்கானதாக இருந்தது; ஆணிகள் என்பவை மரணத்திற்கானவைகளாக இருந்தன. கடின இருதயம் கொண்ட, அனுபவமிகுந்த ரோமப் படைவீரர்கள் எப்போது நிறுத்த வேண்டும் என்பதை அறிந்திருந்தனர். சவுக்கால் அடிக்கும் இந்தச் செயலானது சிலுவையில் அறையப்படுவதின் வேதனையை உயர்த்தியது.

பிலாத்து இயேசுவைச் சவுக்கால் அடிக்கச் செய்தான் (மத்தேயு 27:26; மாற்கு 15:15; யோவான் 19:1), இதை அவன் கிழிக்கப்பட்டு இரத்தம் சிந்தும் இயேசுவைக் கூட்டத்தார் காணும்போது அவர்களிடமிருந்து பரிதாபம் மிகுந்த ஆதரவைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் செய்வித்தான். அவன், "இதோ மனிதன்!" என்று கூறினான் (யோவான் 19:5). பிலாத்துவின் தந்திரம் பலிக்கவில்லை. இயேசுவோ அல்லது பிலாத்துவோ பரிவிரக்கம் எதையும் பெறவில்லை.

*மரித்தல்!* சிலுவையில் அறையப்படுதல் என்பது மனிதர்களின் மனித மாண்பை உறிந்துபோட்டது. அடிப்படையில், சிலுவையில் அறையப்படுதல் என்பது ஒரு மனிதனைக் கொல்வதற்கும், இருப்பினும் இயன்ற வரையில் அவனை உயிருடன் வைப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது. பொதுமக்கள் பார்க்கும் வகையில், ஒரு மனிதன் (நடைமுறை நோக்கங்கள் யாவற்றிற்கும்) நிர்வாணமாக்கப்பட்டு, உதவியற்றவனாக்கப்பட்டு, யாவரும் திட்டி சபிப்பதற்கு விடப்படுவான். இந்த வேதனை யாவற்றுடனும்கூட, மனிதர்கள் சில நாட்களுக்கு உயிருடன் இருக்க முடிந்தது. பெரும்பாலானவர்கள் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு உயிருடன் இருந்தனர். என்ன பயங்கரம்! அதிகமான இரத்த இழப்பு ஏற்படுவதில்லை என்பது வினோதமானதாக இருந்தது. பெரிய இரத்தக் குழாய்கள் எதுவும் பாதிக்கப்படுவதில்லை. இருப்பினும், சுவாசித்தல் என்பது சிரமமானதாக இருந்தது. மூச்சை உள்ளிழுத்தலைக் காட்டிலும் அதை வெளிவிடுதல் என்பது மிகவும் கடினமானதாக இருந்தது. (சிலுவையில் அறையப்பட்ட) ஒரு மனிதர் சுவாசிப்பதற்காகத் தமது கால்களை மேல்நோக்கி இழுப்பார், அது ஆணிகளால் உண்டாகும் வேதனையை அதிகப்படுத்தும். ஹைப்போவோலமிக் அதிர்ச்சி மற்றும் (வெளி) மூச்சுவிடுதல் குறைவினால் ஏற்படும் மயக்கம் ஆகியவற்றினாலேயே அடிப்படையில் மரணம் விளைந்தது. கால்கள் முறிக்கப்படும்போது, குற்றவாளிகள் ஒருசில நிமிடங்களில் இறந்துபோவார்கள்.

ஆங்கிலத்தில் "excruciating" (வேதனை மிகுந்த) என்ற வார்த்தையானது,

"சிலுவையிலிருந்து வெளியே" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. சிலுவையில் மனிதரின் அசைவுகள் அவரது துன்ப நிலையை அதிகரித்தன. சிலுவையில் வசதியான இருப்புநிலை என்று எதுவும் இருப்பதில்லை. வேதனை அளவிட முடியாததாயிருந்தது. தலைவலிகள், பற்றியெரியும் தாகம், தசைகளிலும் நரம்புகளிலும் ஏற்படும் இறுக்கங்கள் முதலியவற்றி னால் - உடலானது பல லட்சக்கணக்கான அதிர்ச்சிகளைப் பெற்றுத் துன்புற்றது.

*காயங்கள்!* ஒரு மனிதர் காயப்படுத்தப்பட்டிருக்க ஐந்து வழிமுறைகள் உள்ளன. இயேசு இந்த ஐந்தையும் பெற்றுக்கொண்டார். (1) கைமுட்டி களாலும் மழுங்கலான ஆயுதங்களாலும் ஏற்படுத்தப்படும் உட்காயங்கள் (மத்தேயு 26:67; மாற்கு 14:65; லூக்கா 22:63). (2) சவுக்கால் அடிக்கப் படுவதால் உண்டாகும் வெட்டுக்காயங்கள். (3) படைவீரர்கள் அவரது தலையின்மீது வைத்து அழுத்திய முள்முடியின் கூர்மையான முனைகளால் உண்டான ஊடுருவும் காயங்கள் (மத்தேயு 27:29). (4) "... அவர்கள் [அவரது] கைகளிலும் [அவரது] கால்களிலும் உருவக்குத்திய"போது (சங்கீதம் 22:16) உண்டான துளையிடப்பட்ட காயங்கள். கைகளினால் உடலினுடைய பாரத்தைத் தாங்க இயலாததாக இருந்தது. ஆணிகள் அவரது கைகளின் பாகமான மணிக்கட்டுகளினூடே ஊடுருவிச்சென்றன. (5) போர்வீரன் ஒருவன் அவரது விலாவில் ஒரு ஈட்டியினால் குத்தியபோது உண்டான குத்தப்பட்ட காயம் இயேசு மரித்திருந்தார் என்பதை உறுதிப்படுத்தியது (யோவான் 19:34).

ரோமப் படைவீரர்கள் குற்றவாளி மரித்திருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் வரையில் அவனை விட்டுச்செல்லமாட்டார்கள். இயேசு சிலுவையில் மரித்தார் என்று வேதாகமம் தெளிவாக அறிவிக்கிறது.

இயேசு அனுபவித்த வேதனை மற்றும் பாடுகள் பற்றிச் சிறிதளவே வலி யுறுத்தம் தரப்பட்டுள்ளது. வேதவசனங்கள் மிகவும் கொடூரமான தகவல் களை இயன்றவரையில் தவிர்த்துள்ளன. இயேசுவின் வேதனையினால் அல்ல, ஆனால் அவரது மரணத்தினாலேயே பாவிகள் இரட்சிக்கப்படு கின்றனர். இருந்தாலும், பாடுகள் தெளிவானதாக இருந்தன. சிலுவை என்பது அமைதியான மரணமாக இருந்தது; குற்றவாளிகள் கதறுவதற்கான பெலமோ அல்லது மூச்சோ கொண்டிருப்பதில்லை. சவுக்கால் அடித்தல் என்பது "சிறிய மரணம்" என்று அழைக்கப்பட்டது; சிலுவையில் அறையப் படுதல் என்பது "பெரிய மரணம்" என்று அழைக்கப்பட்டது.

ஏசாயா 53ஐக் கவனமாகப் படியுங்கள். சிலுவையின் வேதனைபற்றி உங்கள் இருதயம் உணர்வற்றுபோக அனுமதிக்காதீர்கள். அதன் பயங் கரத்தின் அதிர்ச்சியை நீங்கள் கண்டுணராது இருக்க உங்களை அனுமதிக் காதீர்கள்!

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*